**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.351/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 6 |
| Name : | மருத்துவர் .கார்த்திக் |
| Father's/Husband Name: | ஞானப்பிரகாசம் |
| Village : | அரசு மருத்துவமனை துறையூர் |
| Taluk : | துறையூர் |
| Age : | 45/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 17.07.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர் )**

**முதல் விசாரணை :–**

நான் தற்போது துறையூர் அரசு மருத்துவமனையில் குடிமையியல் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் துறையூர் அரசு மருத்துவமனையில் பணியிலிருந்த போது கடந்த 20.03.2023ம் தேதி மாலை 06.50 மணியளவில் சாந்தி க.பெ தர்மலிங்கம் (வயது 52) என்பவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக அழைத்து வந்தனர்.

அவரை விசாரணை செய்த போது 20.03.2023 அன்று மாலை 05.10 மணியளவில் பாதிக்கப்பட்டவர் நத்தக்காடு என்ற இடத்தில் அடையாளம் தெரிந்த 1 நபர் அவரை குச்சியால் தாக்கியதாக கூறினார்.

நான் அவரை பரிசோதனை செய்த போது அவர் சுயநினைவுடன் இருந்தார் .அவருக்கு வெளி காயங்கள் 1. இடது முன் கையில் 5x2x1 cm ஒரு வீங்கிய காயம் இருந்தது, 2. வலது கையில் முட்டிக்கு மேலே கிழிந்த காயம் 1x0.5x0.3 cm அளவில் இருந்தது, 3. இடது முன் கையில் கிழிந்த காயம் 2x0.5x0.3 cm அளவில் இருந்தது அவரை உள் நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட

மூன்று காயங்களும் சாதாரண காயம் என சான்று அளித்தேன். காயம்பட்ட நபருக்கு மருத்துவமனையில் X Ray எடுக்கப்பட்டது. நான் வழங்கிய விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் **அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

பாதிக்கப்பட்டவர் என்னிடம் தன்னை தாக்கிய நபர்கள் தெரிந்த நபர்கள் என்று மட்டும் தான் சொல்லியுள்ளார் என்றாலும், அவர்களில் ஆண் நபர்கள் எத்தனை பேர் , பெண் நபர்கள் எத்தனை பேர் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கிழிந்த காயம் மற்றும் வீங்கிய காயம் ஆகியவை ஒருவர் சாதாரணமாக கீழே விழுந்தாலும் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் உள்ளது. காயமானது எவ்வளவு மணி நேரத்திற்கு முன்பு ஏற்பட்டிருக்கலாம் என்பதை விபத்து பதிவேட்டில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காயமானது நாட்களுக்கு ஏற்றவாறு மாறுபடும் என்றால் சரிதான். குச்சியால் அடித்ததாக மட்டும் தான் சொல்லியுள்ளார்கள் என்றாலும், மூங்கில் கட்டை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் சரிதான். மூங்கில் கட்டையால் வேகமாக அடித்தால் எலும்பு உடைய வாய்ப்புள்ளதா என்றால் அதன் வேகத்தை பொருத்தது.

**அரசு தரப்பில் மறு விசாரணை**

Fresh wound ஆக இருந்தால் விபத்து பதிவேட்டில் காயம் ஏற்பட்ட நேரத்தை குறிப்பிட வேண்டியதில்லை என்றால் சரிதான். பழைய காயமாக இருந்தால் நாங்களாகவே காயம் ஏற்பட்ட நேரத்தை குறிப்பிடுவோம் என்றால் சரிதான். மேலே சொல்லியுள்ள மூன்று காயங்களும் கீழே விழுந்தால் ஒரு சேர ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் இல்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து ஏற்பட்டால் மேலே சொல்லப்பட்ட மூன்று காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் உள்ளது ஆனால் வாய்ப்பு மிக மிக குறைவு.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.